




# வாழ்ந்து சுகமாயிரு

சகோதரி.
**கலா வின்சென்ட்ராஜ்**

**பிரியமானவனே(ளே), உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். 3 யோவான் 1:2** ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

இன்றைக்கு நாம் எல்லோரும் வாழ்ந்து சுகமாயிருக்க, நலமாயிருக்கத்தான் விரும்புகிறோம். ஆனால் எதிர்பாராத பிரச்சனைகள், பாடுகள், வேதனைகள், பற்றாக் குறைகள், இழப்புகள் நம்முடைய வாழ்க்கையை சின்னாபின்னமாக்கும் போது மனம் கலங்குகிறோம் எங்கு போவேன்? யார் என்னை தேற்றுவார்? யார் இந்த துன்பத்தில் எனக்கு கைகொடுத்து தூக்கமுடியும் என்று கண்ணீர் சிந்துகிறோம்.

**இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி, எகிப்து தேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும், இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம் என்று எண் 14:2-ல்** புலம்பினார்கள். காரணம் அவர்கள் கேட்ட துர்ச்செய்தி தான். இதுவரை தேவனை விசுவாசித்த அவர்கள் சூழ்நிலையைப் பார்த்து மனம் சோர்ந்து போய் அழுதார்கள். இப்படித்தான் நீங்களும் கூட போராட்டம் வரும்போது, துர்ச்செய்திகளை கேட்டு, விசுவாசத்தில் தடுமாறும் போது நான் சாகட்டும். நான் வாழ்ந்து என்ன பிரயோஜனம். நான் செய்த நன்மைக்கு எனக்கு தீமை செய்கிறார்களே! என் உள்ளம் உடையும்படி, புண்படும்படி பேசி விட்டார்களே! என்று புலம்புகிறீர்களா? மனம் கலங்காதிருங்கள். உலகம் உங்களை கைவிடும்போது நான் சாவதுதான் நல்லது என்று நீங்கள் புலம்பினாலும் ஆண்டவர் இயேசு என் மகனே! என் மகளே! நீ வாழ்ந்து சுகமாயிரு! நலமாயிரு! என்று சொல்லுகிறார். நாம் நலமாய் வாழ்வதற்கு சில வழிகளைப் பார்ப்போம்!

## கைகளை விரித்தால் நலமாயிருக்கும்

**நீர் உம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தி உம்முடைய கைகளை அவருக்கு நேராக விரித்தால் நலமாயிருக்கும். யோபு 11:13 அப்பொழுது உம்முடைய ஆயுசுகாலம் பட்டப் பகலைப் பார்க்கிலும் பிரகாசமாயிருக்கும்; இருள் அடைந்த நீர் விடியற்காலத்தைப்போலிருப்பீர். யோபு 11:17-ல் வசனம் சொல்கிறது.**

சில வருடங்களுக்கு முன்பு ஒரு சகோதரியை சந்தித்தேன். அவர்கள் சொன்ன வார்த்தை எனக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. அவர்கள் மகனை பாம்பு கடித்து விட்டது. விஷம் கடுமையாக ஏறிக் கொண்டிருக்கிறது. மகன் சுழன்று போனானாம்.



வாயில் நுரைதள்ள ஆரம்பித்துவிட்டது. மகனை ஒரு வண்டியில் ஏற்றி அரசு மருத்துவமனையில் சேர்த்துவிட்டு, இந்த சகோதரி ஒவ்வொரு டாக்டரிடமும் கையை விரித்து, காலில் விழுந்து ஐயா! என் மகன் பிழைத்துக் கொள்வானா? ஐயா! என் மகனைக் காப்பாற்றுங்கள்! என்று கதறிக்கொண்டே இருந்தார்களாம். ஆனால் அந்த சகோதரியின் மகன் கையினால் சைகை செய்து மேலே கையைக் காட்டி ஆண்டவரிடம், இயேசுவிடம் கையை விரித்து கூப்பிடுங்கள்! என்றானாம். நம்பிக்கையில் தளர்ந்து போயிருந்த அந்த சகோதரி இயேசுவே! என் மகனைக் காப்பாற்றும்! என்று கூப்பிடத் தொடங்கினார்கள். மருத்துவர்களும் அந்த மகனுக்கு வேண்டிய சிகிச்சையை செய்யத் தொடங்கினார்கள். ஆச்சரியமாய் அவன் பிழைத்துக் கொண்டான். இன்றும் உயிர் வாழ்கிறான். எத்தனை சந்தோஷம்!

இன்று நம் வாழ்வில் வரும் போராட்டங்கள் நடுவில் மனம் தளர்ந்து போய் யாரை நோக்கி ஓடுகிறோம்? யாரை நோக்கி நம்முடைய கைகளை விரிக்கிறோம்? யோபுவின் நண்பர்கள் யோபுவுக்கு இந்த ஆலோசனை கொடுத்தார்கள். யோபு 11:13,14-ல் நீர் உம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தி, ஏதாவது தவறு செய்திருந்தால் அதை எல்லாம் விட்டுவிட்டு, அக்கிரமத்தை அநியாயத்தை உன் வீட்டை விட்டு அகற்றி, உன் கைகளை ஆண்டவருக்கு நேராக விரித்தால் நலமாயிருக்கும். அப்பொழுது உன் ஆயுசு பட்டப் பகலைப் போல் இருக்கும். இப்பொழுது இருளடைந்திருக்கிற நீர் விடியற்காலத்தைப் போல் இருப்பீர் என்றார்கள். அதேபோல் யோபுவின் ஆயுசு காலம் பெருகினது. இருளடைந்து, எல்லாம் இழந்த நிலையில் யாருமற்றவனாய் இருந்த வாழ்வில் வெளிச்சம் தோன்றியது. இழந்த எல்லாம் பெற்றுக் கொண்டான். சந்தோஷமும், மகிழ்ச்சியும் அவனுடைய வாழ்வில் திரும்பக் கிடைத்தது. அதேபோல் எல்லாம் இழந்து நிற்கிறீர்களா? எங்கும் இருளாய் தெரிகிறதா? விரக்தியாய் எனக்கு இந்த உலகத்தில் என்ன இருக்கிறது என்று வாழ்கிறீர்களா? மனம் கலங்காதிருங்கள். உங்களை நேசிக்க ஒருவர் இருக்கிறார்? உங்கள் கண்ணீரை துடைத்து, உங்கள் இருளை வெளிச்சமாக்க ஒருவர் இருக்கிறார் அவர் இயேசு. அவரை நோக்கி உங்கள் கைகளை விரித்து ஜெபியுங்கள். இயேசுவே! நீர்தான் எனக்கு இரங்குகிறவர். என்னைக் காப்பாற்றும், தூக்கிவிடும் என்று ஜெபித்துப் பாருங்கள் உங்கள் வாழ்வு நலமாயிருக்கும். நீங்கள் பிழைப்பீர்கள்.

## கற்பனைகளை கவனித்தால் நலமாயிருக்கும்

ஆ! என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும், அப்பொழுது உன் சமாதானம் நதியைப் போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருக்கும். ஏசா 48:18



நாம் நலமாயிருப்பதற்கு ஆண்டவரின் வார்த்தைகளை கவனிக்க வேண்டும். சிலர் பேசுகிறதை கவனித்துக் கேட்கவே மாட்டார்கள். பின்பு அந்த விஷயத்தைக் குறித்து கேள்விப்படும்போது நான் சரியாய் கவனிக்கவில்லையே என்பார்கள். பிள்ளைகள் பள்ளியில் ஆசிரியர் நடத்துவதை கவனிக்காதிருந்தால் படிப்பில் மதிப்பெண்களை இழந்து வேதனையோடு வாழ்கிறார்கள். கவனக்குறைவினால் எத்தனையோ நஷ்டங்கள் வருகிறது. சமாதானத்தையே இழந்து போக நேரிடுகிறது. ஒருமுறை சிவகாசியில் ராக்லேண்ட் என்ற துரை மிஷனரியாக வெளிநாட்டிலிருந்து வந்திருந்து ஊழியம் செய்து வரும்போது, அவருக்கு ஒரு உதவியாளர் இருந்தார். அவர் எதைச் சொன்னாலும் சரியாய் கவனிக்கவே மாட்டார்.

அங்கு உள்ள ஆற்றில் குளிக்க துரை இறங்கின உடனே அந்த மனிதரைப் பார்த்து 'துவாலை' கொண்டு வா என்றார். துவாலை என்றால் டவல் என்பதாகும். இவர் வெகுநேரம் கழித்து மூச்சிரைக்க ஓடி வந்தார். கையில் ஒரு டப்பாவை வைத்திருந்தார். துரை அவரைப் பார்த்து எங்கு போனாய்? எவ்வளவு நேரம் குளித்துவிட்டு நான் காத்திருக்கிறேன். பக்கத்தில் இருக்கிற துவாலையை உன்னால் எடுத்து வர முடியாதா என்றார். உடனே அவர் ஐயா துவாலையா சொன்னீர்கள்? நான் சரியாக கவனிக்கவில்லை. என் காதில் தவளை என்று கேட்டது நான் வெகுதூரம் ஓடிப்போய் ஆற்றங்கரையில் இந்த தவளையைப் பிடித்து வந்தேன் என்றார். நன்றாய் வாங்கிக் கட்டிக் கொண்டார்.

நம் வாழ்வில் கவனக்குறைவினால் சிறிய, பெரிய பாதிப்புகளில் நாம் கடந்து போய் விடுகிறோம். இதினிமித்தம் நிம்மதியை இழக்கிறோம். நம்முடைய சமாதானம் பறிக்கப் படுகிறது. குடும்பங்களில் பிரச்சனை, அலுவலகத் தில் பிரச்சனை, வேலையில் பிரச்சனை, சரீரத்தை கவனிக்காததினால் அதிலும் பிரச்சனை மொத்தத் தில் சமாதானம் இல்லாமல் துக்கத்தோடு அலைகிறோம். அதனால் தான் ஏசா 48:18-ல் வேதம் சொல்கிறது நீ என் கற்பனைகளை கவனித்தால் நலமாயிருக்கும் அப்பொழுது உன் சமாதானம் நதியைப் போலிருக்கும். எந்த சூழ்நிலையாக இருந்தாலும், அந்த சூழ்நிலையில் ஆண்டவருடைய வார்த்தை எனக்கு என்ன சொல்லுகிறது என்று வேதத்தை திறந்து வாசியுங்கள். அவர் அதில் பேசுகிறதைக் கவனியுங்கள். அப்பொழுது உங்கள் வாழ்வு நலமாயிருக்கும்.

## என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்

ஆ, என் ஜனம் எனக்குச் செவி கொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்! நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன். சங் 81:13,14 இன்றைக்கு பல்வேறு பிரச்சனைகள் மத்தியில் ஒருவருக்கு ஒருவர் விரோதமாய்



யுத்தம் செய்து, சண்டை பண்ணி விரோதமாய் செயல்படுகிறதை நாம் பார்க்கிறோம். தெய்வப் பயமற்ற மக்கள் மற்றவர்களுக்கு விரோதமாய் மந்திரங்கள், பில்லிசூன்யம், ஏவல் செய்வினைகளை செய்து தங்கள் எதிர்ப்பை காட்டுகிறார்கள். ஒருவரை ஒருவர் தாக்கி கொலை செய்து விடுகிறார்கள். இனி உன் வீட்டிற்கு நான் வருவதில்லை. என் வீட்டிற்கும் நீ வரத்தேவையில்லை என்கிறார்கள். சண்டை சச்சரவுகளினால் குடும்பங்களில் நிம்மதியில்லை. பிரிவினைகள், கசப்புகள், வைராக்கியங்கள் உள்ளத்தில் எழும்பி வேதனையோடே மனிதர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்த்துத்தான் ஆண்டவர் சொல்கிறார். நீ! என் ஜனம், எனக்கு செவிகொடுத்து என் வழியில் நடந்தால் நலமாயிருக்கும். நான் அவர்களை, எதிராளிகளை பார்த்துக் கொள்வேன் என்று சொல்கிறார். ஆனால் நாம் என்ன செய்கிறோம். நான் அவர்களை ஒரு கை பார்த்து விடுகிறேன் என்று யுத்தம் செய்கிறோம். நீயா? நானா? பார்க்கலாம் என்று அவர்களுக்கு எதிராய் செயல் படுகிறோமா?

ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார். என்று வேதம் சொல்கிறது. நீதி 16:7 இன்று நம்முடைய வழிகள் எப்படி இருக்கிறது. நாம் ஆண்டவருக்கு செவி கொடுத்து அவர் வழிகளில் நடக்கிறோமா? நம்மை ஆராய்ந்து பார்த்து தேவனிடம் திரும்புவோம். அப்போது அவர் நமக்கு எதிராய் செயல்படுகிறவைகளை தாழ்த்திப் போடுவார். ஆண்டவர் பிரியமானவனே(ளே)! உன் ஆத்துமா வாழ்வதுபோல் நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு! என்று சொன்னார். இன்று நாம் சுகமாயிருக்கும் வழிகளை வேதவசனத்தோடு அறிந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். என் ஆண்டவர் தாமே ஒவ்வொருவரும் அவரை நோக்கி கைகளை விரித்து ஜெபிக்கவும், அவர் வசனங்களை கவனிக்கவும், அவர் வழிகளில் நடக்கவும் உதவி செய்வாராக!